10.04.2026.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண். 191/2025</u>

அ.சா.6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகராஜ் | | |
| த/பெ | கோவிந்தராஜூ | | |
| கிராமம் | சாலாமேடு | தொழில் | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 51/2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 10.04.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி காவல் நிலையத்தில், சிறப்பு உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 02/06/2023-ம் தேதி விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது, ஜானகிபுரம் கிராமத்தை சேர்ந்த வினோத் மனைவி சிவகங்கா என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமான ஒரு புகாரை கொடுத்துக் கொண்டார். அந்த புகாரைப் பெற்று நிலைய குற்ற எண். 407 / 2023, இ.த.ச பிரிவுகள் 294 (b), 436 -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த புகாரில் வீரபத்திரனுக்கும், அவர் குடும்பத்திற்கும் இடையே உள்ள விரோதம் குறித்தும், தன் வீடு கொளுத்தி அழிம்பு செய்ததற்கான காரணத்தையும் அதில் சொல்லியிருந்தார். என்னிடம் காட்டப்படுவது தான் அந்த புகார் ஆகும். அது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் பதிவு செய்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகாரையும்,

அச்சு முதல் தகவல் அறிக்கையையும் சேர்த்து முறையாக நீதித்துறை நடுவர் விழுப்புரம் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். ஒரு பிரதியை மேலதிகாரிக்கும், மற்றொரு பிரதியை விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். அப்போது பணியில் இருந்த ஆய்வாளர் திரு.ஆனந்தன் அவர்கள் அதை விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்கள். அந்த விசாரணையின் போது ஆய்வாளருக்கு நான் துணையாக இருந்ததாலும், ஆய்வாளரின் கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு பரீட்சயம் என்பதாலும், ஆவணங்களின் அடிப்படையில் ஆய்வாளர் மேற்கொண்ட விசாரணை பற்றி சாட்சியம் அளிக்கிறேன். வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடம் சென்று, சம்பவ இடமான ஜானகிபுரம் முருகன் கோயில் தெருவில் உள்ள சிவகங்கா என்பவரின் எரிந்த வீட்டின் எதிரில் வைத்து, சாட்சிகள் முகமது தாஹிர், வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடம் குறித்து முடிவு செய்ய ஒரு பார்வை மகசர் தயார் செய்துள்ளார்கள். அந்த பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். அந்தப் பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு ஒரு மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்கள். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு காலை 9.00 மணியளவில் எரிந்த சிவகங்காவின் கூரை வீட்டில் இருந்து அதே சாட்சிகள் முன்னிலையில், 1.பாதி எரிந்தும், எரியாமலும் இருந்த வைக்கோல் சிறிதளவு, 2.எரிந்தும், எரியாத நிலையில் உள்ள துணி சிறிதளவு, 3.முழுவதும் எரிந்த நிலையில் உள்ள மர கறி துண்டுகள் சிறிதளவு, ஆகியவைகளை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளார்கள். அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார்கள். அந்த கைப்பற்றுதல் மகசர் என்னிடம் காட்டப்படுவது தான். அது அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சான்று பொருட்களை பார்த்தால் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்று சாட்சி கூறினார். சாட்சி சரியாக அடையாளம் காட்டினார். அவைகள் முறையே சா.பொ.1, 2, 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு ஆய்வாளர் அவர்கள் சம்பவ சாட்சிகள் சிவகங்கா, மஞ்சுளா, வினோத், பாரத் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு பார்வை மகசர் சாட்சிகள் முகமது தாஹிர், மற்றும் வெங்கடேசன், ஆகியோர்களை விசாரணை செய்து

தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். ஆய்வாளர் அவர்கள் விசாரணையில் சம்பவம் உண்மை என்றும், எதிரி குறித்து சொன்னது உண்மை என்றும், தெரிய வந்து எதிரியை தேட ஆய்வாளருக்கு அவரது ரகசிய புலனாளி கொடுத்த தகவலின் பேரில், ஜானகிபுரம் ஏரிக்கரையில் இருப்பதாக தெரிந்து, சாட்சிகள், ரகசிய புலனாளி எதிரியை அடையாளம் காட்ட, மதியம் 1.00 மணியளவில் காரணம் கூறி கைது செய்துள்ளார். பின்பு அவரை சாட்சிகள் 1.வெற்றிவேல் த/பெ.ரமேஷ், வல்லரசு த/பெ.தட்சணாமூர்த்தி, அவர்கள் முன்னிலையில் எதிரி வீரபத்திரனை விசாரிக்க அவர் எந்த வற்புறுத்தலும், துன்புறுத்தலும் இன்றி தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துக் கொண்டுள்ளார். அதை ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்துள்ளார்கள். அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் தன்னை அழைத்து சென்றால், சிவகங்கா வீட்டை கொளுத்திய இடத்தை அடையாளம் காட்டுவேன் என்று கூறியுள்ளார். பின்பு சாட்சிகளை விசாரணை செய்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு எதிரியை காவல் நிலையம் அழைத்து சென்று பாராவிடம் ஒப்புவித்தும், பின்பு உச்ச நீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி முறையாக எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். சான்றாவணங்கள், சான்று பொருட்கள், ஆகியவற்றை முறையாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்கள். பின்பு வழக்கு சொத்தினை படிவம் - 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்கள். அந்த படிவம் - 95 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்கள். பிறகு ஆய்வாளர் அவர்கள் விசாரணை முடித்து, எதிரி வீரபத்திரன் த/பெ.கலியன் என்பவர் மீது இ.த.ச பிரிவுகள் 294 (b), 436 படி இறுதி அறிக்கை தயார் செய்து முறையாக நீதிமன்றத்திற்கு அனைத்து ஆவணங்களுடன் அனுப்பி வைத்துள்ளார்கள். ஆய்வாளரின் விசாரணையில், சாட்சி சிவகங்கா எதிரிக்கும், தங்களுக்கும் உள்ள முன்விரோதம் குறித்தும், முதல் நாள் நடந்த சம்பவம் குறித்தும், காவல் நிலையத்தில் ஆஜராகி எழுத்து மூலமான புகார் கொடுத்துக் கொண்டது பற்றியும், சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சாட்சி மஞ்சுளா, வினோத், ஆகியோர்கள் சம்பவம் குறித்தும்,

முன்விரோதம் குறித்தும், சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். சாட்சி வெங்கடேசன் ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடம் குறித்து விசாரணை செய்து பார்வை மகசர், வரைபடம் தயார் செய்தபோது உடனிருந்து கையொப்பம் செய்ததாக தான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சாட்சி வெற்றிவேல் எதிரி வீரபத்திரனை கைது செய்த போதும், அவரை விசாரணை செய்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்த போதும், உடனிருந்து அதில் கையொப்பம் விட்டதாக தான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

அ.சா.1 கொடுத்த புகாரின் அடிப்படையில் சரியான விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக சம்பவ இடம் செல்லாமல், இந்த வழக்கில் உள்ள ஆவணங்கள் அனைத்தையும் காவல் நிலையத்திலேயே வைத்து தயார் செய்து, தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரியின் ஒப்புதல் வாக்கு மூலத்தில் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

<u>இல்லை</u>